நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
11 MAY 2002

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 28 சனிக்கிழமை (11.05.2002) தொலைபேசி 3378 ஒலி 143




## தனிநாட்டுக்கான மாற்று வழிபற்றி பேச புலிகள் மறுத்து வருகின்றனர்

### அமெரிக்காவில் ஜனாதிபதி தெரிவிப்பு

(நியூயோர்க்)

புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சமாதான முன்னெடுப்புக்கள் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறும் சிறுவர் தொடர்பான விசேட மாநாட்டில் கலந்து கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா அங்கு இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்து கருத்து வெளியிட்ட ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவிக்கையில்:-

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையின் முக்கிய விடயங்கள் குறித்து பாங்கொங் நகரிலோ அல்லது வேறு இடத்திலோ பேச்சு நடத்துவதற்கு இன்னமும் இணங்கவில்லை.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்காக இடைக்கால

(8ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்கட்சி கூட்டமைப்பினர் தமிழ்ச்செல்வனுடன் இன்று சந்திப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்த்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தும் முகமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் நேற்று வன்னி சென்றனர்.

ரெலோ இயக்கத்தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஸ்அணி) சார்பில் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரே நேற்று நண்பகல் வன்னிக்கு தனித்தனி வாகனங்களில் பயணமாகினர்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத்தில்

(8ம் பக்கம் பார்க்க)

### அரசு புலிகள் செய்து கொண்ட

# புரிந்துணர்வு உடன்படிக்கையில் நீதிமன்றம் தலையிட முடியாது

### மேல்முறையீட்டு நீதிபதி தீர்ப்பு

(கொழும்பு)

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுடன் அரசு செய்து கொண்ட புரிந்துண்ர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவேண்டும் எனக் கோரி கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலிப்பதற்கு நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை என்று நீதிபதி ஷிராணி திலகவர்த்தனா தீர்ப்பளித்துள்ளார்.**

புரிந்துணர்வு உடன்படிக்கையை இரத்துச் செய்யும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு மேல்முறையீட்டு நீதி மன்றத்தில், சிஹல உறுமய, ஜே.வி.பி மற்றும் சிங்கள தேசிய சங்கம் ஆகியன தாக்கல் செய்த மனுவை ஆராய்ந்த போதே நீதிபதி ஷிராணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை அரசின் கொள்கைகளுக்கு உட்பட்ட தீர்மானம். எனவே அதற்கு எதிராக மனுக்களை விசாரிக்கும் போது நீதிமன்றத்தின்

(8ம் பக்கம் பார்க்க)

### வன்னியில் இயங்கும்

## யாழ் மாவட்ட ப. நோ. கூ. சங்கங்கள் மீண்டும் சொந்த இடங்களில் இணையும்

(யாழ்ப்பாணம்)

1995ம் ஆண்டு இடம்பெயர்ந்து வன்னிப்பகுதிக்குச் சென்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் அதே சங்கங்களுடன் இணையவுள்ளன.

அடுத்த மாதமளவில் இணையவுள்ள ஏழு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் விபரம் வருமாறு.

அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், வேலணை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியனவே இங்குள்ள சங்கங்களுடன் இணையவுள்ளன.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக

(8ம் பக்கம் பார்க்க)

## தீவகத்தில் புலிகள் நடமாடத் தடை

ஆராய்ந்த போதே நீதிபதி ஷிராணி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விசாரிக்கும் போது நீதிமன்றத்தின்

(8ம் பக்கம் பார்க்க)

## பொத்துவிலில் வீதித்தடை விசேட அதிரடிப்படை குவிப்பு

(அம்பாறை)

அக்கரைப்பற்று பொத்துவில் வீதியில் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு புதிய சோதனை நிலையங்களை அமைத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கரைப்பற்று பொத்துவில் வீதியில் விசேட அதிரடிப்படையினர் வீதித்தடைகளை ஏற்படுத்தி வருவதுடன் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் புதிதாக சோதனை நிலையங்களையும் அமைத்து வருகின்றனர்.

(8ம் பக்கம் பார்க்க)

### தீவகத்தில் புலிகள் நடமாடத் தடை

## கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் எடுத்துரைப்பு

(வவுனியா நிருபர்)

ஏ-9 வீதியை மக்கள் பாவனைக்கு வாரத்தில் ஏழு தினங்களும் திறந்து விடுதல், மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்டுவரும் கெடுபிடிகளை நீக்குதல், ஆலயங்கள் பாடசாலைகளில் இருந்து படையினர் வெளியேறுதல் போன்ற விடயங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது குறித்து விடுதலைப் புலிகளுடைய அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டேயின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இவற்றை நடைமுறைப்படுத்த போர்

(8ம் பக்கம் பார்க்க)

## வலி வடக்கு மக்களை மீண்டும் சொந்த இடங்களில் குடியிருத்துவேன்

### அமைச்சர் ஜயலத் வலம்புரிக்கு பேட்டி



(அலுவலக நிருபர்)

பல வருடங்களாக இடம்பெயர்ந்து அகதிவாழ்க்கை வாழும் வலிகாமம் வடக்கு மக்க்ளை மீண்டும் அவர்களது சொந்த மண்ணில் குடியிருப்பதற்கு வேண்டிய வழிவகைகளை விரைவில் எடுக்கவுள்ளேன் என்று வலம்புரிக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கதிர்காமத்திலிருந்து புறப்பட்ட சமாதான யாத்திரைக்குழுவினருடன் யாழ்- கண்டி வீதியூடாக யாழ்ப்பாணம் வந்திருந்த புனர்வாழ்வு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனாவை நேற்றுகாலை றான் அலுவலகத்தில் வலம்புரிச் செய்தியாளர் சந்தித்தார்.

வலிகாமம் பகுதி மக்களை மீளவும் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு நான் மட்டும் தனித்து செயற்படமுடியாது. வலிகாமம் பகுதியில் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்துக்குப் புதிதாக நியமனம் பெற்றுள்ள இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவிடம் இது தொடர்பான அறிக்கை ஒன்றைத் தருமாறு கேட்டுள்ளேன். இது தொடர்பான அறிக்கை அவரிடம் இருந்து பெறப்பட்ட பின், இராணுவத் தளபதி, பாதுகாப்புக் கவுன்சில், பாதுகாப்பு

(8ம் பக்கம் பார்க்க)

## கடற்படையினர் சூடு மீனவர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை திருக்கடவூர் கிராமத்தில் இருந்து சிறிய இயந்திரப் படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

வில்வராஜா ஜெயக்காந்தன் (வயது 37) என்பவரே இவ்வாறு காயமடைந்தவர் ஆவார். இவருடன் சென்ற இரண்டு மீனவர்கள் காயம் எதுவும் இன்றித் தப்பிக் கொண்டனர். (இ-5)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


### வகுப்புகள்

ஆண்டு 6-11 வரையான பாடங்கள் ஆரம்பமாகியுள்ளன. ஒவ்வொரு வகுப்பிலும் கூடியது 15 மாணவர்கள், தனித்தனி கவனம், அனுமதிக்கு தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (5062)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்ட நல்லின டாஸ்கவுண்ட் (DASH HOUND) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு 70 (34) கோவில் வீதி, யாழ்ப்பாணம். (கி-5098)

### விற்பனைக்கு

வீட்டுப்பாவனைக்குரிய தீராந்திகள் விற்பனைக்கு உள்ளன. (6x4, 4x3) என்பன கைவசம் உள்ளன. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி S பரமநாதன் (சந்திரன்) 185|1 கில்னர் லேன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ஞாயிற்றுக்கிழமை முழுநேரமும் சந்திக்கலாம். (5302)

### தவறிவிட்டது

இல 203/3, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம எனும் முகவரியைச் சேர்ந்த சிறில் ஐங்கரன் என்பவருடைய தேசிய அடையாள தட்டை (இல842053188V) அவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். (5301)


# கலாசாரத்தைக் கட்டிக்காத்த நெடுந்தீவில் இன்று சமூகச்சீரழிவு

## தடுப்பாரும் இல்லை; தட்டிக் கேட்பாரும் இல்லை

இயற்கை அழகிலும், வந்தாரை வரவேற்று விருந்தோம்பும் பண்பிலும், தனக்கென ஒரு தனியிடத்தினைப் பெற்று விளங்குவது நெடுந்தீவு. இத்தீவு பலதரப்பட்ட அறிஞர்களையும், கல்விமான்களையும் பிரசவித்தது என்பதற்கு வரலாற்றுச்சான்றுகள் பல உள்ளது. அந்த வகையில் அமைதியின இருப்பிடமாக இருந்த இத்தீவு தற்போது சீரழிவின் சின்னமாக விளங்குவது எல்லோர் மனத்தையும் புண்படுத்துவதாக உள்ளது. இந்நிலைக்குக் காரணம் இல்லாமல் இல்லை. சிவில் தன்மையினைப் பேணுவதற்கு இத்தீவில் கிராம அலுவலர்களையும் பிரதேச செயலரையும் தவிர பொலிஸ் பாதுகாப்பு முறை தற்போது முழுமையாக இல்லைஎன்றே குறிப்பிடல் வேண்டும். இதன் வெளிப்பாடே சீரழிவின் முழுவடிவம் தோற்றம் பெற்றுள்ளது.

இத்தன்மையில் இநந்து நோக்கும்போது அண்மைக் காலத்தில் மன்னாரில் இருந்து நெடுந்தீவுக்கு சட்டவிரோதமானமுறையில் பெருமளவு பொருட்கள் கடத்திவரப்படுகின்றது. இவற்றில் 14 வருடங்கள் இல்லாத பட்டாசு வகைகளும் அடங்கும் இப்பட்டாசு வகைகள் கடத்திவரப்பட்டு மூன்று ரூபாய்க்கு ஒரு பட்டாசு விற்பனைசெய்யப்படுகிறது.

இதைப் பயன்படுத்தி பல இளைஞர்கள் அமைதியைக் குலைப்பதில் ஈடுபடுகின்றார்கள் இயங்கிக் கொண்டிருக்கும் அலுவலகங்கள், பாடசாலைகளுக்கு அண்மையிலும் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களையும், இரவு வேளையில் தூங்கிக் கொண்டிருப்பவர்களையும் கெடுப்பதோடு, பழிவாங்கும் நோக்கோடு வீடுகளினுள்ளும் வீட்டு வளவினுள்ளும் இரவு வேளையில் வெடி கொழுத்திப்போடுவது அதிகரித்துள்ளது,

தட்டிக்கேட்பாரற்ற நிலையில் சந்தி சந்தியாக இளைஞர்குழுக்கள் கூடி நின்று தகாத வார்த்தைகளால் பேசுவதும், வீதியால் போவோரை வீண் வம்புக்கு இழுப்பதும் காதல்குடும்ப பிரச்சனை சில தனிப்பட்ட பிரச்சினைகளை சமூகப் பிரச்சினையாக மாற்றிஅதில் சுகம்காண்பதும் அதிகரித்துள்ளது.

அத்தோடு ஆடு, மாடுகள் அவற்றின் இறைச்சிகள் படகுகள் மூலம் மன்னார் மாவட்டத்துக்கு கடத்துவதும் புளுக்கொடியல், ஒடியல் என்பவற்றைக் குறைந்த விலையில் கொள்வனவு செய்து அதிகூடிய விலையில் மன்னார் வியாபாரிகட்கு விற்பனை செய்து கொள்ளை இலாபம் ஈட்டும் சம்பவங்களும் அதிகரித்துள்ளது. இந் நடைமுறைகளைத் தட்டிக் கேட்டு, சிவில் நடைமுறைகளை பாதுகாக்கத் தவறின் எதிர்காலத்தில் சீரழிவின் நிலையமாக நெடுந்தீவு விளங்கும் என்பது நிச்சயம்.

**நெடுந்தீவு துமிலன்**

### உதைபந்தாட்டத்தில் கோப்பாய் வெற்றி

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் பிரதேச செயலர் பிரிவுகளுக்கிடையில் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்றையதினம் நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு அணி வெற்றியீட்டியது.

நேற்று மாலை துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு அணி கரவெட்டி பிரதேச செயலர்பிரிவு அணியை 2 ; 1 என்ற கோல்க் கணக்கில் வென்றது. (இ- 2)

## இராசி பலன்

(11- 05-2002)
சித்திரை 28 சனி
சதுர்த்தி பி.ப 3.46வரை
அச்சுவினி பி.ப 1.10 வரை
இராகுகாலம் 8.54 - 10.24
நல்லநேரம் 2.54 - 4.24

**மேடம்**
சயனசுகம், விருந்துபசாரம் நல்லகாரியம், புதியபொருள் சேர்க்கை.

**இடபம்**
பிரயாண கஸ்ரம், கோப மடைதல், பிதாசிந்தை, முயற்சிதாமதம்

**மிதுனம்**
உறவினர் வருகை, இனிமையான சம்பவம், முயற்சிகைகூடும், தனலாபம்.

**கடகம்**
செய்தொழில் முன்னேற்றம், அதிகாரம், உற்சாகம், காரிய அனுகூலம்

**சிங்கம்**
உடல் உழைப்பு, ஆரோக்கியக்குறைவு, முயற்சிமந்தம், புதியதிட்டமிடல்.

**கன்னி**
காரியதாமதம், வீண்பிரச்சினை, உடற்சோர்வு, போசனசுகம்.

**துலாம்**
கலந்துரையாடல், பிரயாணம், தனவரவு, காரிய அனுகூலம்.

**விருச்சிகம்**
பகைவரால் நன்மை, முயற்சி பலிதம், உறவினர் சந்திப்பு, மனமகிழ்ச்சி.

**தனுசு**
குடும்பக்கவலை, வியாபார நன்மை, நண்பர்கள் உதவி முயற்சி தாமதம்.

**மகரம்**
உஷ்ண வியாதி, மாணவர் கல்விச்சிறப்பு, சகோதரர் வெறுப்பு, காரியதாமதம்.

**கும்பம்**
காரிய அனுகூலம், கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை சகோதரர் உதவி.

**மீனம்**
பொருள் விரயம், வாக்குக் கலகம்,முயற்சிதாமதம்,மனக் கிலேசம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## வெளிவாரிப் பட்டப்படிப்பு பதிவு 2001 | 2002

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 2001 / 2002 கல்வியாண்டுக்குப் பின்வரும் கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத்தேர்வு நாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து 31.08.2002 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கைநெறி
2. கலை முதற் கற்கைநெறி
3. நுண்கலைமாணி (சங்கீதம் / நாட்டியம்) முதலாம் வருடம்
4. நுண்கலைமாணி (சங்கீதம் / நாட்டியம்) இரண்டாம் வருடம்
5. நுண்கலைமாணி (சங்கீதம் / நாட்டியம்) மூன்றாம் நான்காம் வருடம்

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி, I கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம்.

இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவநாகரிகம், மெய்யியல், அரசறிவியல்.

| | ரூபா |
|---|---|
| விண்ணப்பப் படிவம் | 15.00 |
| பாடத்திட்டங்களும் விதி முறைகளும் | 35.00 |

(முதற்கலை / முதல் வர்த்தக நெறிக்கானது)

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் பெற விரும்புவோர் தமது பாடநெறியையும் கற்க விரும்பும் பாடங்களையும் குறிப்பிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை ! தபாற் கட்டளையுடன் சுயமுகவரி இடப்பட்ட ரூபா 16.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 021-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்

10-05-2002 (கி-4198)


தொண்டர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகள்

## வட - கிழக்கு மாகாண ஆளுநரை சந்தித்து பேச்சு

(திருகோணமலை)

யாழ்.மாவட்டத்தில் நிரந்தர நியமனம் கோரி மறியல் போரில் ஈடுபட்டு வரும் தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் பிரதி நிதிகள் மூவர் நேற்று வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜெயவர்த்தனாவைச் சந்தித்து தமது பிரச்சினைகள தொடர்பாக கலந்துரையாடினர்.

கலந்துரையாடலில் இறுதி முடிவேதும் எட்டப்படாத போதும் சில உறுதி மொழிகளை ஆளுநர் வழங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் வலய ரீதியாக பாடங்கள்ஒவ்வொன்றுக்கும் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை தன் பார்வைக்கு உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு மாகாணக்கல்விச் செயலாளர் க. சண்முகலிங்கத்தைப் பணித்துள்ள ஆளுநர்,

அவரது பட்டியல்படுத்தலின் பிரகாரம் நியமனங்களை வழங்குவதென உறுதி மொழியளித்துள்ளார்.

இது இவ்விதமிருக்க நேற்று ஆராய்ந்தவிடயங்கள்தொடர்பாக கலந்துரையாட குடாநாட்டிலுள்ள சகல தொண்டர் ஆசிரியர்கள் மற்றுப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை தவறாது மறியல்போர் நடக்கும் மேலதிக மாகாணக் கல்விப்பணிமனை முன்பாகக் கூடுமாறு பேச்சில் கலந்து கொண்ட பிரதி நிதிகள அறிவித்துள்ளனர்.

மேற்படி சந்திப்புக்கான ஏற்பாட்டினை யாழ். மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் என். கே. சிவாஜிலிங்கம், ஜேர்மனிய சட்டஆலோசகர் எம். ரி. எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

### ஒன்றுகூடல்

(யாழ்பபாணம்)

சுயவிருப்பத்தில் ஓய்வு பெறும் திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்காத தொழிலாளர்கள் அனைவரையும் லங்கா சீமெந்துலிமிட்டெட் பகுதி காரியாலயம் (இணுவில்)முன்பாக நாளை மு.ப10மணிக்கு ஒன்று கூடுமாறு கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் லங்காசீமெந்துலிமிட்டெட் கிளைச்சங்கம்அழைப்பு விடுத்துள்ளது. (உ)

### நாளைகூட்டுறவாளர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் இயக்குநர் சபை, உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி கலந்துகொள்ள விருப்பதால் அங்கத்தவர்களையும் இயக்குநர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை செயலாளர் சு.சிவசுப்பிரமணியம் கேட்டுக்கொண்டுள்ளார். (ம)

## 100நாள்வேலைத்திட்டத்தில் 100 நடமாடும் செயலமர்வு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசின 100நாள் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 100நடமாடும் செயலமர்வுகளை மாவட்டச் செயலகம் நடத்தியுள்ளது.

ஒவ்வொருநடமாடும்சேவையிலும் 500இற்கும்அதிகமான பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டு 300இற்கும் அதிகமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன. (உ)

# தமிழர் தாயகக்கோட்பாட்டை அரசாங்கம் ஏற்கப்போவதில்லை

## சிங்கள எம்.பிக்களிடம் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முக்கிய கோரிக்கையொன்றான தமிழர்தாயகக் கோட்பாட்டை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப்போவ தில்லைஎன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தன்னைச் சந்தித்த சிங்கள எம். பிக்களின் குழுவொன்றிடம் தெரிவித்துள்ளார்.

எம். பிக்கள் குழுவிற்கு தலைமையேற்றுச் சென்ற தினேஷ் குணவர்த்தன இச் சந்திப்பில் வடக்கு-கிழக்கின் சிங்களமக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும், சிங்கள அகதிகள் வடக்கு-கிழக்கில் மீளக் குடியமர்த்தப்படல் வேண்டும், எந்த ஒரு இனத்திற்கும் தனியானதொரு தாயகம் அனுமதிக்கப்படலாகாது, விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படலாகாது, இடைக்கால நிர்வாகம் என்னும் பெயரில் வடக்குகிழக்கை புலிகளிடம் வழங்கக் கூடாது ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தார்.

இதற்கு பிரதமர் பதிலளிக்கையில், இடைக்கால அரசாங்கம்பற்றி இறுதியான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் இவ்விவகாரங்கள் பற்றி அவ்வப்போது எதிர்க்கட்சிகளுடன் கருத்துப் பரிமாறுவதாகவும் தெரிவித்திருந்தார். (உ)

# கறுப்பாக மாறிவரும் மாணிக்க கங்கை நீர்

(கொழும்பு)

மாணிக்க கங்கை நீர் கறுப்பு நிறமாக மாறி வருகிறது. பெல்வத்தை சீனித் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் அசுத்த நீர் கதிர்காம மாணிக்க கங்கையில் கலப்பதனாலேயே நீர் அசுத்தமாகி கறுப்பு நிறமாக மாறி வருகிறது.

இதனால் கங்கையில் வாழும் மீன் இனங்கள் செத்து மடிவதுடன், யாத்திரிகர்களும் நீரைப் பயன்படுத்தத் தயக்கம் காட்டிவருகின்றனர். (உ-3)

# தனியார் விமானசேவை 15இற்குப் பின் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான விமான சேவையை நடத்த அனுமதி வழங்கப்பட்ட இரண்டு தனியார் நிறுவனங்களும் இம் மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் தமது சேவைகளை ஆரம்பிக்கும் எனத் தெரியவருகிறது.

தற்சமயம் தினமும் 3 அல்லது 4 சேவைகளை ஹெலிரூர்ஸ நிறுவனம் விமான சேவையை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-10(

# சகல கட்சிகளின் கருத்துக்களையும் ஆராய்ந்து ஆவன செய்யப்படும்

## நில விவகார அமைச்சர் ராஜித

(கொழும்பு)

இரு தசாப்தங்களாக நாட்டில் நடைபெற்று வரும் போரினை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக, சகல அரசியல் கட்சிகளினதும் கருத்துக்களும், பிரேரணைகளும் ஆராய்ந்து ஆவன செய்யப்படும் என நில விவகார அமைச்சர் ராஜித சேனாரத்தின தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'வடக்கு-கிழக்கு பிரச்சினைகளும் சமாதான நடவடிக்கைகளும்' என்னும் கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

தற்போது நடைமுறையில் இருந்துவரும் யுத்த நிறுத்தம் காரணமாக மீதப்படுத்தப்படும் பணம் கடற்படையை விஸ்தரிப்பதற்கு பயன்படுத்தப்படும்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தாயகக் கோட்பாட்டு கோரிக்கையை ஐக்கிய தேசிய முன்னணி தலைமையிலான அரசு ஒரு போதும், எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

# இரவு 7.15 இற்கு இடம்பெற்ற 4 வது விமான சேவை இடைநிறுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

பலாலிக்கும் இரத்மலானைக்கும்இடையில் தற்போது தினசரி மூன்று விமான சேவைகள் மாத்திரமே இடம்பெற்று வருகிறது

இரவு 7.15 மணிக்குஇடம் பெற்று வந்த 4 வது விமான சேவை போதிய பயணிகள் இன்மையால் கடந்த 2 தினங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்டதையடுத்து பெருமளவு மக்கள் தரைவழிப் பாதையால் தமது பயணத்தைத் தொடர்வதையடுத்து விமானப் பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

# 3நாள் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கும் டறன்பிராந்திய அணிகளுக்குமிடையில் செஸ்ரன் லீக்ஸ்ரீட்டில் நடைபெற்ற 3நாள் கிரிக்கெட் போட்டி வெற்றிதோல்வியின்றிமுடிவடைந்துள்ளது.

இலங்கை அணி முதலாவது இனிங்ஸில் 167 ஓட்டங்களைப் பெற்றது.இதில் அரவிந்தடிசில்வா 53 ஓட்டங்களைப் பெற்றார்.

டறன் பிராந்திய அணி முதலாவது இனிங்ஸில் 469 ஓட்டங்களைப் பெற்றது.

இதேவேளைஇலங்கைஅணி இரண்டாவது இனிங்ஸில் 4விக்கெட்டுகளை இழந்து282 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றசல்ட் ஆனற் 112 ஓட்டங்களையும் அரவிந்த டிசில்வா ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும் பெற்றனர். (உ.9)

# கரடி தாக்கி படை வீரர் படுகாயம்

(கொழும்பு)

பம்பைமடுப் பிரதேசத்தில் வனாந்தர நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இராணுவ வீரர் ஒருவரை கரடி தாக்கியதில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த இராணுவ வீரரின் மண்டை ஓட்டுப் பகுதியை கரடி தாக்கிக் காயப்படுத்தியுள்ளமையால் அவரின் உடல் நிலை மிகவும் மோசமாக உள்ளதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-5)

# கலாமன்றத்தில் நாடகப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

பிரபல நாடக நடிகரும் நெறியாளரும் 23 வருடங்களின் பின்னர் தற்போது நாடு திரும்பியுள்ளவருமான அ. தார்ஸீசியஸின் நெறிப்படுத்துதலில் திருமறைக் கலாமன்றத்தில் நாடகப் பட்டறை, கருத்துரை என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்தவகையில், திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இன்று பி.ப.2.30 மணிமுதல் மறைக்கல்வி நடு நிலையத்தில் நாடகப்பட்டறையும்,

எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.15 மணிக்கு 'புலம்பெயர் சூழலில் தமிழ் நாடகத்தின் போக்கு' என்ற தலைப்பில் கருத்துரையும் இடம்பெறவுள்ளது. (உ-106)

# சிறுவர் கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

ஐ.நா சபையின் ஏற்பாட்டில் 8,9,10 ஆம் திகதிகளில்அமெரிக்காவில் நடைபெற்ற குழந்தைகள் உரிமைதின நிகழ்வை முன்னிட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலையாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

சிறுவர்களின் உரிமைகளை வலியுறுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் யுனிசெவ் பிரதிநிதி எலியனோறா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக அ. தார்ஸீசியஸ் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதேவேளை, அமெரிக்கா மாநாட்டுக்கு மன்ற இயக்குநர் மரியசேவியர் அடிகள் தலைமையில் பிரதி இயக்குநர்கள் மூவர் பயணமாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-106)

# கிராமிய மட்டத்தில் இலவச சட்ட சேவை

## சர்வோதயம் ஏற்பாடு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடா நாட்டில் கிராமிய மட்டத்தில் வாழ்கின்ற மக்களுக்கு இலவச சட்ட உதவிச் சேவைத் திட்டம் ஒன்றினை யாழ். மாவட்ட சர்வோதய சிரமதான சேவை இயக்கம் ஆரம்பிக்கவுள்ளது.

இது தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கென மொறட்டுவ விலுள்ள தலைமைப் பணியகத்தில் இருந்து சட்ட அதிகாரிகளும் திட்ட அலுவலர்களும் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

குடாநாட்டிலுள்ள எட்டுக் கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 24 சர்வோதய தொண்டர்களுக்கு இலவச சட்டஉதவித் திட்டம் பற்றிய கருத்தரங்கு ஒன்றும் நேற்றைய தினம் சர்வோதயப் பணிமனையில் நடாத்தப்பட்டது. (உ-77)

# பொலநறுவையில் நூதனசாலை

(பொலநறுவை)

ஆசிய, பசுபிக் பிராந்திய நாடுகளின் அருங்காட்சி நூதனசாலை யொன்றினை பொலநறுவையில் நிறுவ முடியுமென இலங்கை அருங்காட்சி நூதனசாலைப் பணியகம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொண்டுள்ள யுனெஸ்கோ நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ஹச்சிரோ மசூரா இதற்கான முடிவினை எடுக்கவுள்ளார்.

பொலநறுவையில் அருங்காட்சி நூதனசாலையொன்று அமைப்பது தொடர்பாக, இப்பிராந்திய நூதனசாலை நிபுணர்கள் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-8)

# சமாதானம் குறித்து அரசு இறுதி முடிவு எடுக்கவில்லை

## கரு இவ்வாறு கூறுகிறார்

(கொழும்பு)

சமாதானப் பேச்சிற்கான அத்திபாரமே தற்போது இடப்பட்டுவருகின்றது. இனவாத சக்திகள் விமர்சிப்பது போல் எந்த விடயம் குறித்தும் அரசாங்கம் இறுதி முடிவு எடுக்கவில்லை. தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின் போதே எந்த விடயம் குறித்தும் முடிவு எடுக்கப்படும்,

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து கடந்த புதன் கிழமை கேம்பிரிஜ் டொசில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ. தே. க வின் பிரதித்தலைவரும் அமைச்சருமான கருஜெயசூரியா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்;

சமாதானத்திற்காக அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைக்கு சகல மக்களினதும் ஆதரவு தேவை.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஆதரவினை மக்கள் 'கடந்த பாராளுமன்ற மற்றும் உள்ளூராட்சி சபை தேர்தல்களில் வழங்கியுள்ளனர். (உ-3)

# கூட்ட மேடையில் இருந்து பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு பொலிஸ்கான்ஸ்டபிள் பத்தேகன சஞ்ஜீவினது வீட்டைச் சோதனை செய்த சீ.ஐ.டீயினர், ஐ.தே.க வினது மருதானைக் கூட்டமேடையிலிருந்து எடுக்கப்பட்டதாக கூறப்படும் கதிரைகள், வயர்கள், இலக்கத்தகடுகள் போன்றவற்றை கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் பத்தேகன சஞ்ஜீவின் தந்தையாரையும் கைது செய்துள்ளனர்.

20 வரையான போலிவாகன இலக்கத்தகடுகளையும் பத்தேகன சட்டவிரோதச்செயற்பாடுகளுக்கு பயன்படுத்தியுள்ளதாக சீ.ஐ.டீ, யினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (உ)

# உலக வங்கி உதவியுடன் நியாப் திட்டத்தின் கீழ் சமூகநல முன்னெடுப்புகள்

(தென்மராட்சி)

நியாப் திட்டத்தின் செயற்பாடுகள் யாழ்.குடா நாட்டில் மிகவும் விரைவில் ஆரம்பிக்கப்பட விருக்கின்றன.

உலக வங்கியின் நிதியுதவியுடன் அமுல்படுத்தப்படவுள்ள இத் திட்டத்தின் கீழ் பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் எனத் தெரியவந்துள்ளது.

இதற்கமைவாக யாழ்.மாவட்ட அரச செயலகத்தில் நியாப் பணிமனை இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்தகட்டமாக குடாநாட்டிலுள்ள குளங்கள் ஆழமாக்குதல் புனரமைத்தல், அணைக்கட்டுகள் அமைத்தல் விவசாயக்கிணறுகள் புனரமைத்தல், குடிநீர் கிணறுகள் அமைத்தல்போன்ற பல சமூக நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டங்களில் மக்கள் பங்களிப்பினை முழுமையாகப் பெறும் பொருட்டு சமூக உணர்வூட்டல் நிகழ்வுகள் மேற் கொள்ளவும் ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. (உ-77;

# மனித பாவனைக்கு உதவாத முக்கூட்டுமா நலன்புரி நிலையங்களுக்கு விநியோகம்

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிக்கை

(தென்மராட்சி)

சுகாதாரசேவைகள்திணைக்களத்தினால், சில இடம்பெயர்ந்தோர் நலன்புரிநிலையங்களுக்கு அண்மையில் விநியோகம் செய்யப்பட்ட திரிபோஷாமா, மனித பாவனைக்குப் பொருத்தமற்றதாக இருந்துள்ளதாக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்அதன் மாதாந்தநிலவர அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

குடாநாட்டிலுள்ளபோஷாக்கற்ற பிள்ளைகளுக்கும் கர்ப்பிணித்தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்காக சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் 7 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வரும் திரிபோஷா சத்துணவு சில நலன்புரி நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட வேளை அவை மனித பாவனைக்குப்பொருத்தமானதாகக் காணப்படவில்லை.

சுகாதாரசேவைகள்திணைக்களம்மாதாந்தம்35 ஆயிரத்து 880 பைக்கற்றுக்களைக்குடாநாட்டுக்குகொழும்பில்இருந்து தருவித்து வருகின்றது.

அந்நிலவர அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

தென்மராட்சியில் மீளக்குடியமர்ந்துள்ள விவசாயிகள் மீண்டும் விவசாய நடவடிக்கைகளில்ஈடுபடுவதற்குமிகுந்த ஆர்வத்தையும் ஊக்கத்தையும் கொண்டுள்ள போதிலும் கூட, அரசாங்க தரப்பில் இருந்தோ அல்லது சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் தரப்பில் இருந்தோ எத்தகைய ஊக்குவிப்புகளும் இதுவரை வழங்கப்படவில்லை.

இவ்வருடம் ஜனவரி முதல் யாழ். குடா நாட்டுக்கு பல அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும் பிரதம மந்திரியும் வருகை தந்து பல கூட்டங்கள், மாநாடுகள், சந்திப்புகளை நடாத்தியிருந்தபோதிலும் கூட,

யுத்தசூழ்நிலையில்வாழ்ந்து வந்த மக்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான எத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இதுவரை இடம் பெறவில்லை.

அத்துடன் மக்களது மனங்களில் எவ்விதமானநம்பிக்கையும் இதுவரை வளர்ந்தெடுக்கப்படவில்லை என்றும் அந்நிலவர அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-77)

## கவிதை நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

மூதறிஞர் கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரையின் கவிதைநூல் அறிமுகம் 6வது ஆண்டு நினைவு தினமும் நாளை காலை 9.30 மணிக்கு கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் த. தவேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் நினைவுப் பேருரையைக. நடேசனும்(தெணியான்) கவிதை நூல் அறிமுகவுரையை யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் த.கலாமணியும் நிகழ்த்தவுள்ளனர். (உ)

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மகமாஜி சனசமூக நிலையத்தின் முன்பள்ளிக் கட்டடநிதிக்காக நாளை ஞாயிற்றுக்கிழமைபி.ப.1.00 மணிக்கு நீர்வேலி சவாரித் திடலில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இடம்பெறவுள்ளது. (உ)

## நாவலர் மேற்கொண்ட

ஞானம் அது. பசுபாசஞானங்கள் இரண்டுக்கும் எட்டாதவன் இறைவன். அவனருளாலே தான் அவனை எட்டுதல் கூடும். அவனருள் பதிஞானம்.

> 'மூவகை ஞானத்தின் இயல்பையும், நேற்றைய பாலனின் பிரபாவத்தையும் திருமுறைகள் சித்தாந்த சாத்திரங்கள் உபநிடதங்கள்,சிவாகமங்கள் என்னும் அதிப்பிரபலப் பிரமாணங்கள் வாயிலாகவும், அநுபவ அநுபூதிமான்களின் வாயிலாகவும் விரிவுரை ஊற்றெடுத்துப் பெருகியது. நீண்ட காலத்துவம் அணுப்பிரமாண மாய்ச் சுருக்கிக் கழிந்தது'

சமய அறிவு இலக்கண இலக்கிய அறிவு நிறைந்த அறிஞர்களே பெருமளவு நிரம்பிவழிந்தநல்லூர்ச் சந்நிதானத்தில் அவர்கள யாவரும்'சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச் செவிவாயாக நெஞ்சுகளனாகக் கொண்டு உருகிச் சுவைத்த புராண படனம்' அது.

ஆனால், கல்வியறிவிற்குறைந்த சாதாரண ஆண்களும் பெண்களும் நிறைந்த இடங்களிலே எளிமையும் விளக்கமும் நிறைந்தவகையிலேயே நாவலர் உள்ளிட்ட சைவப் பெரியார்கள் புராண படனம் நிகழ்த்தினர் என்பது சுட்டி உணர்த்தவேண்டிய ஒன்றாகும். இத்தகைய இடங்களிலே தமது வித்துவத் திறமையைக் காட்டலாகாது என்பதே, சுன்னைக் குமாரசுவாமிப்புலவர் போன்றோரின் முடிந்த கருத்தாய் விளங்கியதற்குச் சான்றுகள் உள்ளன.

ஆக, இத்தகைய புராண படன நிகழ்வுகளால் கந்த புராண கலாசாரம் ஒன்று பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை யாழ்ப்பாணத்தில் நிலவியமைக்குச் சில சான்றுகளைக் காண்போம்.

### கந்தபுராண கலாசாரம்

ஒரு சமயத்தின் முழுமை அதன் மூன்று கூறுகளுள்ளே அமைதல் காணலாம். வழிபாடு (தோத்திரம்), ஒழுக்கநெறி (தர்மம்), தத்துவம் (சாத்திரம்) என்பன வே அந்த மூன்று கூறுகளுமாகும். கந்தபுராணத்தைப் பொறுத்தவரை மற்ற எந்தப் புராணங்களிலும் இல்லாத அளவிற்கு இம மூன்றும் அதன் கண் அமைந்துள்ளன எனலாம்.

சிவபெருமான், கந்தசுவாமி ஆகிய இரு பெருங் கடவுளரதும் மகத்துவங்கள் யாவும் கந்தபுராணத்தில் ஆங்காங்கு தோத்திரங்களாகத் தரப்பட்டுள்ளன. பஞ்சபுராணங்களை ஓதிய பின் கந்த புராணத் தோத்திரப் பாடல்களை ஓதுவதாகிய மரபு இன்றும் நிலவுவது சிறப்பித்துக் கூற வேண்டுவதாகும் (2- ம் வான் முகில் வழாது பெய்க...)

காசிபனு உபதேசப்படலத்திலே 'தருமம் என்றொரு பொருள் உளது' எனத் தொடங்கும் திருப்பாடலைப் பண்டிதமணி அடிக்கடி எடுத்துக் காட்டுவார். சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் சைவசித்தாந்த நெறிக்கு அடித் தளமாகவும், உயிர் நாடியாகவும் விளங்கு வது அதன் ஒழுக்கப் பெறுமானமே என்பதை வலியுறுத்துவார்.

> தருமம் என் றொருபொருளுளது தாவிலா
> இருமையினின்பமும் எளிதின் ஆக்குமால்
> அருமையில் வரும் பொருள் ஆகும் அன்னதும்
> ஒருமையி னோரக்கலால் உணர்தற் கொன்னுமோ

என்ற காசிப முனிவரின் உபதேசம். தருமத்தினை உணர்தலில் உள்ள அருமைப்பாட்டையும், அதன் மூலம் பெறத்தகும் இம்மை மறுமைப் பயன்களையும் சான்றோராகிய ஞானியரால் மட்டுமே உணர் தற்கான அதன் தகுதிப்பாட்டையும்எடுத்தியம்பி நிற்கின்றது. சோக்கிரட்டீஸ் என்றகிரேக்க ஞானியும் 'அறம் எனப்படுவது அதனை அறிந்திடும் அறிவே' (Virtue Knowledge) என்பதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

தத்துவத்தைப் பொறுத்தவரை கந்தபுராணம் வைதிக சமய கூறுகள் அனைத்தையும் விரித்து விளக்கி (ஏகான்மவாதம்) மாயவாதம் அவற்றுளெல்லாம் தலையாயகி சைவசித்தாந்தம் என்பதை மிக உறுதியுடன் நிறுவக் காண்கிறோம். அசுரகாண்டத்தில் காசிபனு உபதேசப்படலம்முதலாக மாயை உப தேசப் படலம் சுக்கிரன் உபதேசப்படலம், ஈறாக உள்ளபடலங்களும் தக்ஷகாண்டத்தில் தத்சி உத்தரப்படலம் என்பன இவ்வகையில் விதந்து கூறப்பட வேண்டுபனவாகும்.

ஆக, கந்தபுராணத்தைக் கற்றவர், கற்றுப் புராணபடனம் செய்பவர், அவற்றைக் கேட்டு உணர்ந்து அவற்றின் வழி ஒழுகுவர் ஆகியோர் கந்த புராண கலாசாரம் ஒன்றிற்கு உரிமையாளராய் விளங்கியதில் வியப்பில்லை.

சிவனிலும் வேறாகாத முருகப் பெருமானின் ஆலயங்கள் பொலுவும் அருளும் பொலிந் அடியார்களின் பத்திச் சுவையினை நனி சொட்டிட வைப்பதும் கந்தசட்டி, கார்த்திகை, திருக்கார்த்திகை, வெள்ளிக்கிழமை விரத நாள்களை மிகவும் பத்திபூர்வமாக அநுட்டிப்பதும காவடி, அங்கப்பிரதட்சணம், அடியழித்தல் விளக்கீடு போன்ற வற்றைச் சிரத்தையுடன் தமது நேர்த்திக் கடன்களாக நிகழ்த்துவதும் முருக நாம பஜனைகளில் (முருகனாலய மகோற்சவங்களின் போது) ஈடுபடுவதுமாகிய பலவற்றாலும் கந்த புராண கலாசாரம் இன்றும் யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நிலவுகின்றது எனலாம்.

-முற்றும்

## சர்வதேச நாணய நிதிய பிரதி முகாமைப் பணிப்பாளர் இம்மாதம் 21 இல் இலங்கைவருகை

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைப் பணிப்பாளர் எஸ். யுக்கிலி சைக்கி எதிர்வரும் 21 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்.

இவர் இங்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், இலங்கை மத்திய வங்கியின் பிரதி நிதிகள் ஆகியோரைச் சந்தித்து பேசவுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் பொருளாதாரஅபிவிருத்திக்கு சர்வதேச நாணய நிதியம் உதவக் கூடிய முறைகள் குறித்து ஆராயப்படவுள்ளது.

அவசர தேவைகளின்போது இந்நிதியத்திலிருந்து இலங்கை பெற்றுக் கொள்ளும் மேலதிக கடன் வசதிகள் கடந்த அரசாங்கத்தின் போது மட்டுப் படுத்தப்பட்டிருந்தன.

ஐ.தே அரசுஆட்சிக்குவந்த பின்னர் இத்தடையை நீக்க சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்துள்ளதாகவும் இதன்படி 14 மாத காலத்திற்கான 253 மில்லியன் டொலர்களை சர்வதேச நாணய நிதியம் வழங்கவுள்ளது. (உ-9)

## புலிகளின் தடையை நீக்கவேண்டாம் இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

### மகாசங்கம் ஏற்பாடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டாம் எனக் கோரி, மகா சங்கத்தைச் சேர்ந்த பிக்குகளின் சம்மேளனம் கொழும்பு பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டக் கூட்டமொன்றை நடத்தவுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் தீவிரப்போக்குடைய நாடாளுமன்ற உறுப்பினர்களும், இவ் ஆர்ப்பாட்டக் கூட்டத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

கூட்ட முடிவில் இவர்கள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்து புலிகள் மீதான தடையை நீக்கவேண்டாம் எனக் கோரவிருப்பதுடன்,

இவ்வாறான தொடர் போராட்டங்களை நடத்தவும் திட்டமிட்டுள்ளனர். (உ)

## 14 வரை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர்கலாசாலையில் இறுதியாண்டு ஆசிரிய மாணவர்களுக்கான பரீட்சை நடைபெற்று வருகின்றது.

இப்பரீட்சைகள் யாவும் 14 ஆம் திகதி முடிவடையும் எனவும்,

15 ஆம்திகதி ஆசிரிய மாணவர்கள் யாவரும் தாம் முன்னர் கற்பித்த பாடசாலைக்கு செல்வார்கள் என்றும் கலாசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-19)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை

(கொழும்பு)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரி செய்யப்பட்ட மனுத்தாக்கல் மீதான விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதி மன்றத் தில் நடைபெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினாலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனினாலும் செய்து கொள்ளப் பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை ரத்து செய்யுமாறு கோரி,

மக்கள்விடுதலைமுன்னணி, சிஹல உறுமய, சிங்களயாதிக சங்கமய ஆகியனஅண்மையில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தன.

அதேநேரம், யுத்தத்தில் காணாமல் போன படை வீரர்களின் பெற்றோர்சங்கம் மனித உரிமைகள் அமைப்பு, அண்மையில் விடுதலைப்புலிகளால்விடுதலை செய்யப்பட்ட கப்டன் யானுக தேநுகர ஆகியோர் இவ்மனுவினை நிராகரிக்க வேண்டும் எனக் கோரி மனுக்களை தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (உ-8)

## புத்த பிக்குகள் ஏற்பாட்டில் புகைத்தலுக்கு எதிரான மாநாடு கம்போடியாவில்

(ஸ்நாங்பென்)

புகைப்பிடித்தால் எதிர் கொள்ளும் நோய்களைத் தடுப்பதற்கான மாநாடு கம்போடியாவில் இடம்பெற்று வருகிறது.

தாய்வான், மற்றும் இலங்கைப் புத்த பிக்குகள் கம்போடிய புத்த பிக்குகளுடன் இணைந்து இம் மாநாட்டை நடத்தி வருகின்றனர்.

தாய்வான் நாட்டு புத்தபிக்குகள் அதிகளவில் மரணமடைவதற்கு புகைப்பிடித்தலே காரணம் என்று உலக சுகாதார அமைப்புவிடுத்த அறிக்கையைத் தொடர்ந்தே இது பற்றிய ஆராய்வுமாநாடு இடம் பெற்று வருகிறது.

புத்தபிக்குகள் புகைப்பிடிக்கும் பழக்கத்தை நிறுத்த வேண்டுமானால், இலங்கையைப் போன்று புத்த சாசன விதிமுறைகளை கையாண்டு அதனைப் பின்பற்றவேண்டும் என இம் மாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்டது. (உ-7)

நல்லூர் இளை நூலகம்

## இன்று ஒரு தகவல்

# திரை இசையின் பங்களிப்பு

இசை உலகுக்குத் தமிழ்த் திரை உலகம் மிகப் பெரிய தொண்டாற்றியுள்ளது. இசையின் இமய முடிச் சிகரமாக இலங்கும் தோடி, கல்யாணி, காம்போதி, மோகனம் முதலியவற்றின் கொடுமுடியை அடைதல் என்பது சாதாரணமான மனிதனுக்கு இயலாத ஒன்று. அதற்குப் படியமைத்துக் கொடுத்தது திரைப்பட இசை ஒன்றே. இராகங்களின் கடுமையனா பகுதிகளை நீக்கி புரியும் பகுதிகளைத் திரைப்பட இசையாக தந்துள்ளார்கள்

பல ஆண்டுகளுக்கு முன்னால் வடவேங்கடம் முதல் தென்குமரி வரை ஒலித்தது ஒரு குரல். அது பாகவதரின் குரல். இவரின் பாடல் ஒவ்வொன்றும் பசுமரத்தாணியாகக் கால வெள்ளத்தையும் கடந்த மாமல்லபுரச் சிற்பம் போல இறவா வரம் பெற்றுள்ளது. ஆனால் இன்றைக்கு வருகின்ற திரைப்படப்பாடல்கள் அளவிலும், வாழ்விலும் புற்றீசல்களாக அமைகின்றன. பெரும்பாலும் கேட்கும் பொழுது மட்டுமே கிளர்ச்சியைத் தருகின்ற மேனாட்டு இசையின் நிழலாக அமைகின்றது. பல்லவிக்கும், அனுபல்லவிக்கும் இடையிலே அமைகின்ற கருவிகளின் இசை பாடலோடு ஒட்டாது கர்ண கடூரமாக அமைகிறது. அந்தப் பின்னணி இசையைக் கேட்கும்போது ஏதோ ஒரு காட்டு மிராண்டி ஒலியினைக் கேட்பது போலுள்ளது. இசையின் வெற்றி கருவி ஒலியும், குரல் ஒலியும் இணைவதிலே தான் உள்ளது

பொதுவாகக் கூறுமிடத்து திரைப்பட இசை, இசை உலகுக்கு இணையற்ற தொண்டாற்றி வருகின்றது. பாமர மக்கள் முதல் படித்தவர் ஈறாக ஏதேனும் ஒரு திரைப்படப் பாடலை முணு முணுப்பதைக் கேட்கலாம். இதனின்று அனைவரது உள்ளங்களும் திரையிசையை விரும்புகின்றன என்று புலனாகின்றது. திரையிசையால் மக்கள் கவலைகளை மறக்கின்றனர். மகிழ்ச்சியினைப் பெறுகின்றனர். இவ்வாறாகக் கர்நாடக இசைக்கு நுழை வாயிலாகவும், நடை வண்டியாகவும் திரைப்பட இசை அமைகின்றது.

மு. கடம்பநாதன்

## வெளிநாடுகளில் உள்ளவர்களுடன்
# திரை வாயிலாக கலந்துரையாட விரைவில் வசதி செய்யப்படும்

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் இங்குள்ள உறவினர்களுடன் நேரடி திரைவாயிலாக கலந்துரையாடும்முறைஒன்றைஅறிமுகம் செய்ய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பணியகம் நடவடிக்கை எடுத்திருப்பதாக பணியக பிரதி பொது முகாமையாளர் எல். கே. றுகுணுகே தெரிவித்துளார்.

இத்திட்டம் அடுத்த 3மாத காலத்துக்குள் நடைமுறைப் படுத்தப்படும் என்றும் இதன்படி அவசர தேவை ஏற்படும் போது முன்னறிவித்தல் கொடுத்த பின் வெளிநாட்டவர் இங்குள்ள உறவினர்களுடன் கலந்துரையாட சந்தர்ப்பம் கிடைக்கும்.

இலங்கையர்கள் அதிகளவில் வேலை செய்யும் நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலும் கொழும்பு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திலும் இதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

# இறைவரித் திணைக்களத்தை அதிகார சபையாக்க நடவடிக்கை

(கொழும்பு)

உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத்திணைக்களம் என்பவற்றை ஒன்றிணைந்த அதிகாரசபையாக மாற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந் நடவடிக்கை அடுத்த வருடம் ஏப்ரல் மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கு, முன்னர் ஆணையாளர் நாயகம் ஓ. எம். வீரசூரியதலைமையில் இறைவரித் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவதுதொடர்பான செயற்திட்டங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான குழு நியமிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவது தொடர்பாக தொழிற் சங்கங்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாததுடன் ஆலோசனையும் பெறப்படவில்லை என்று இறைவரித்திணைக்கள முக்கியஸ்தர் ஒருவர் அதிருப்திதெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக உள்நாட்டு இறைவரித்திணைக்களம் விரைவில் ஜனாதிபதியை சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

## பத்திரத்தில் கைச்சாத்து

(கொழும்பு)

நியூயோர்க்கில்நடைபெற்ற சிறுவர்கள் தொடர்பான விசேட மாநாட்டில் சிறுவர் உரிமைகள் தொடர்பான தெரிவுப் பத்திரத்தில் இலங்கையின் சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கைச்சாத்திட்டுள்ளார்.

சிறுவர்களை விற்பனை செய்வது, பாலியல் தொழில்களில் ஈடுபடுத்துவது, ஆபாசப் படங்களில் சித்திரிப்பது என்பனவற்றை தடைசெய்வது தொடர்பாக இப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5)

## விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்று வரும் விளையாட்டு விழாவின் எல்லே போட்டியின் (ஆண்கள்) இறுதிப்போட்டிகள் இன்று காலை 8.00 மணி முதல் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளது.

வலைப்பந்தாட்டப் போட்டியின் அரைஇறுதிப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை 8.00 மணிதொடக்கம் இடம்பெறவுள்ளன. (உ-10)

## பண்டைய செங்கற்கள் கண்டெடுப்பு

(கொழும்பு)

அநுராதபுர காலத்திற்கு முற்பட்டதாகக் கருதப்படும் செங்கற்கள் சில கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகில்கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் கோயில் ஒன்றை கட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது இக்கற்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இது பற்றி புத்தசாசன அமைச்சுக்கும் தொல்பொருள் ஆய்வு திணைக்களத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளபோதும் எவரும் அங்கு சென்று பார்வையிட்டதாக தெரியவில்லை. (உ-9)

## புத்தாக்க கண்காட்சியில் இலங்கைக்கு 7 பதக்கங்கள்

(கொழும்பு)

இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஐந்தாம் திகதி வரை ஜெனிவாவில் இடம் பெற்ற சர்வதேச புத்தாக்குநர் கண்காட்சியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய குழுவிற்கு இரண்டு தங்கப்பதக்கங்கள் உட்படமொத்தம் ஏழு பதக்கங்கள் கிடைத்துள்ளன.

இதில் நாணயம் எண்ணும் இயந்திரம் மற்றும்பாதுகாப்பான மண்ணெண்ணெய் விளக்கு ஆகியவற்றை வடிவமைத்தஇலங்கை பிரதிநிதிகள் தங்கப்பதக்கங்களை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

## வருடாந்த உற்சவம்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது. (உ-5)

## பிந்துனுவெவ படுகொலை ட்ரயல் அற் பார் விசாரணை 13 இல்

(கொழும்பு)

2000 ஒக்டோபரில்பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலைகள் சம்பந்தமான ட்ரயல் அற் பார் விசாரணை கடந்தவியாழக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம் பெற்றது.

இச் சம்பவத்தில் 27 தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்டதுடன், 14 இளைஞர்கள் காயமடைந்திருந்தமை தெரிந்ததே.

41 சந்தேக நபர்களுக்குஎதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டபோதுஅவர்கள் தாம் குற்றவாளிகளல்லர் எனவும் தெரிவித்தனர்.

இம்மாதம் 13 ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகும் என நீதியரசர் தெரிவித்தார்.

நீதியரசர்கள் எரிக் பஸநாயக்க உபாலி அபேவர்த்தன, சரத் அம்பேபிட்டிய ஆகியோர் விசாரணைகளை நடத்தவுள்ளனர்.

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் கே. ரட்ணவேல், ஜனாதிபதி சட்டத்தரணி டீ.டபிள்யூ அபயக்கோன், எம். ரெமிடியஸ் ஆகியோர் மனுதாரர்கள் சார்பில் ஆஜராகியிருந்தனர். (உ)

## வீதிகளுக்கு பெயரில்லை உல்லாசப் பயணிகள் சிரமம்

(காரைநகர்)

காரைநகருக்கு வரும் உல்லாசப் பயணிகள் வீதிகளுக்கான பெயர்குறியீடு இன்மையால் வீண் அலைச்சலிற்கும் சிரமத்திற்கும் உள்ளாகுகின்றனர்.

கசூர்னா கடற்கரைக்கு பெருமளவில் வருகைதரும் உல்லாசப்பயணிகள் பாதை தெரியாமல் கடற்படைத் தளத்திற்கு அண்மையால் செல்லும் சம்பவங்களும் அண்மையில் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் பாதைகாட்டும் இளைஞர்கள் சிலர் விசமத்திற்காக வேறு பாதைகளைக் காட்டி வேடிக்கை பார்ப்பதையும் அவதானிக்கமுடிகின்றது. (உ-246)

## வறிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் வறிய மாணவர்கள் ஆயிரம்பேருக்கு வழங்கவென யுனிசெவ் நிறுவனத்தினால் கல்வி உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

அவற்றை மேலதிக கல்விப் பணிப்பாளர் மூலம் வலயங்களிற்கு வழங்கி வறிய மாணவர்களிடம் சேர்ப்பிக்குமாறு யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

எனினும், வலிகாமம் இவகம் ஆகிய இரு வலயங்களே இது வரையில் உபகரணங்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## நல்லூர் நெசவுப் பயிற்சி பாடசாலைக்கு ஆட் சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நெசவுப் பயிற்சிப் பாடசாலைக்கு புடைவைக் கைத்தொழில் அமைச்சினால் 2002, 2003 கல்வி ஆண்டிற்குவிண்ணப்பங்கள்கோரப் பட்டுள்ளன. (க. பொ. த சா/த) 6 பாடங்களில் இரு தடவைக்குமேற்படாது தமிழ், கணிதம், உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்த 18-28 வயதுக்கு உட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 17ஆம் திகதியாகும். விண்ணப்பங்கள்யாவும் பொறுப்பதிகாரி, அரசினர் நெசவுப்பயிற்சிப் பாடசாலை நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். (உ)

## யுனெஸ்கோ நிதியுதவியுடன் இலங்கையில் ஊடகப் பயிற்சி நிலையம்

(கொழும்பு)

இலங்கையில் செய்தியாளர்களைப் பயிற்றுவிப்பதற்கும் ஊடக சுதந்திரத்தை பலப்படுத்துவதற்கும் நிதி உதவி வழங்குவதற்கு யுனெஸ்கோ நிறுவனம் உத்தேசித்துள்ளது.

இதன் அடிப்படையில், இலங்கையில் முதல் தடவையாக ஊடக பயிற்சி நிறுவனம் ஒன்றை அமைப்பதற்கு எவ்வாறு ஒத்துழைப்பது என்பதுபற்றியுனெஸ்கோ நிறுவனம் ஆராய்ந்து வருகின்றது.

ஊடகத்துறைசார் சட்டங்களைப் பலப்படுத்துவதிலும் தாம் உதவிகளைச் செய்ய முடியுமெனவும் தற்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள யுனெஸ்கோ அமைப்பின் பணிப்பாளர் கூறியுள்ளார். (உ-5)

## சிந்தனைக்கு விருந்து

### கொழும்புப் பயணம் வேண்டோம்

கொழும்புப் பயணம் சிற்றுந்திற்
குதூகல மாகத் தொடர்வோரை
வழியில் மறித்துச் சோதனைகள்
வைத்துப் பலமணி நேரத்தைக்
கழிக்கச் செய்துபின் அனுப்புவதால்
களைப்பும் சோர்வும் சலிப்புமிக
'விழையோம் கொழும்புப் பயணமினி
வேண்டோம்' என்பர் பலபேரே.

- பழையவன்

சிற்றுந்து- van

# இடம் பெயர்ந்தவர்கள் பதிய மீள் சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால அனர்த்தங்களால் யாழ் பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள ஜே-61 நெடுங்குளம், ஜே-62 கொழும்புத்துறை கிழக்கு, ஜே-63 கொழும்புத்துறை மேற்கு கிராமஅலுவலர் பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்துவேறு பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் குடும்பங்களில் இடம் பெயர்ந்தோருக்கான பதிவினை இதுவரை மேற்கொள்ளாதோர் எதிர்வரும் திங்கள், செவ்வாய்ஆகிய நாட்களில் புங்கங்குளம் வீதியில் அமைந்துள்ள ஜே- 63கிராம அலுவலர் பணிமனையில்பதிவினை மேற்கொள்ளலாம் எனவும், இத் தினங்களிற்குப் பிறகு பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாதெனவும் யாழ். பிரதேசசெயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார் (உ)

## பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கும் தீர்மானமில்லை

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிடுவது பற்றி தீர்மானிக்கப்பட வில்லை என்று உள்துறை அமைச்சர் ஜோண் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூலமான கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். (உ-3)

# பொலித்தீன் உற்பத்திக்கு தடையுத்தரவு வரலாம்

(யாழ்ப்பாணம்)

நதிகள் மாசடைவதை தடுப்பதற்குச் சட்டங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றாடல் வனவள பாதுகாப்பு அமைச்சர் ருக்மன் சேனநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சுற்றாடலைப் பாதிக்கும் பொலித்தீன் தயாரிப்பை நிறுத்தாவிட்டால் அவற்றைத் தடை செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சுற்றாடலைப் பாதிக்கும் பொலித்தீன் குறித்து தயாரிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படும் எனவும்,

இதன்படி தயாரிப்புக்களை மேற்கொள்ளத் தவறுவோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# பதிலடிக்கு இஸ்ரேல் தயார் படைகள் திரட்டல் மும்முரம்

(ஜெரூசலேம்)

இஸ்ரேலின் தலைநகருக்கருகே கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற குண்டுத்தாக்குதலைத்தொடர்ந்து இராணுவ ரீதியான பதிலடித் தாக்குதலை நடத்த இஸ்ரேல் சகல வழிகளிலும் முனைந்து வருகிறது.

இந் நடவடிக்கைகளுக்கு இஸ்ரேலின் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் படையைவிட்டுவிலக்கப்பட்டவர்களும் புதியவர்களும் படைக்கென திரட்டப்பட்டு வருகின்றனர்.

குண்டுத்தாக்குதலுக்கு காரணமென கருதப்படும் பலஸ்தீனத் தீவிரவாதகுமாஸ் இயக்கத்தின் பிரதான பாதுகாப்பு பிரதேசமான காஸாப் பகுதியை சுற்றி இஸ்ரேலியர் தமது படைகளை குவித்துள்ளனர்.

இதேவேளை,

அரபாத்தின் நிர்வாக அமைப்பு இக்குண்டுத் தாக்குதலை பயங்கரவாத தாக்குதலில் மிகவும் கடுமையானது என்று சுட்டிக்காட்டியுள்ளது. (உ-7)

## லிபியா, சிரியா, கியூபா பேரழிவுப் படைக்கலங்கள் தயாரிப்பதில் முன்னணி

(வாஷிங்டன்)

பேரழிவு தரும் ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் தயாரிப்பதில் லிபியா, சிரியா, கியூபா ஆகிய மூன்று நாடுகளும் முன்னணியில் உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இவை உலகில் உள்ள தீவிரவாத அமைப்புக்கள் அனைத்திற்கும் ஆயுதங்களை வழங்கி வருவதுடன், தீவிரவாத நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்தும் வருகின்றன என்று அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.

இவ்வாறான சட்டவிரோத செயல்களை வளரவிட்டால் தீவிரவாதம் அதிகரிக்க சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும், இதனை ஒழிக்க சர்வதேச ரீதியில் ஒத்துழைப்பு வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## நிதிஉதவிகளை பலஸ்தீனம் துஷ்பிரயோகம்

(ரெல்அவிவ்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி மற்றும் பல்வேறு உதவிகளை பலஸ்தீனம் தவறாகப் பயன்படுத்துகிறது என இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது.

இக்குற்றச் சாட்டுக்களை ஆதாரத்துடன் நிரூபிக்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் இஸ்ரேலைகேட்டுள்ளதைஅடுத்து' 100 பக்கம்கொண்ட அறிக்கை ஒன்றை இஸ்ரேல் அமெரிக்க அதிபர் புஷ்ஷிடம் கையளித்துள்ளது.

இவ்வறிக்கையை ஆராய்ந்து இது தொடர்பான நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொள்ளும் எனவும் புஷ் தலைமையிலான குழு தெரிவித்துள்ளது. (உ-7)

## எட்னா வைரஸினால் 70 பேர் மரணம்

(லண்டன்)

எட்னா வைரஸ் நோய் காரணமாக ரபோன் கொங்கோ நாடுகளைச் சேர்ந்த 70 பேர் பலியாகியுள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனம் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

கடுமையாகப் பரவி வரும் இந்த எட்னா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்து வகைகள் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

# வவு.காங்கேசன்துறை ரயில்பாதை புனரமைப்பு

## நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆராய்வு

(கொழும்பு)

வவுனியா-காங்கேசன் துறைக்கு இடையிலான ரயில் பாதைகளை புனரமைப்பது தொடர்பாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் சிவில்விமானத்துறை அமைச்சர் திலக் மாரப்பன ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவிலிருந்து காங்கேசன் துறை வரை சுமார் 160கிலோ மீற்றர் நீளமான இப்பாதையை புனரமைப்பு செய்வதற்கு28 0கோடி ரூபா தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் இன்னும் இரு ஆண்டுகளில்இப்புனரமைப்புதிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (உ)

# பாவனைக்குதவாத உணவு பொருட்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்

யாழ். மாநகர சபையின் நடமாடும் சுகாதார சேவை நேற்று யாழ். நகரின் முதலாம், பதினேழாம் வட்டாரங்களில் மாநகர முதல்வர் செ. கந்தையன் தலைமையில் நடைபெற்றது.

மாநகர சபை எல்லைக்குட்பட்ட நடைபாதை வியாபாரிகளிடம் இருந்த அழுகிய 147 அன்னாசிப்பழங்கள் உரிமையாளரின் அனுமதியுடன் அழிக்கப்பட்டன,

வர்த்தக நிலையங்களில் இருந்த காலாவதியான கோடியல் நூடில்ஸ், பிஸ்கற், அப்பம் மா, பப்படம், இனிப்பு வகைகள் அடங்கிய இரண்டு இலட்சத்திற்கும் கூடுதலான பெறுமதியுடைய உணவுப் பொருட்கள் கடை உரிமையாளரின் சம்மதத்துடன் அழிக்கப்பட்டுள்ளன.

நடமாடும் சுகாதாரசேவை தொடரும் என மாநகரமுதல்வர் அறிவித்துள்ளார். (உ-3,59)

### யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி மாணவி

# ஜேர்மனிக்குக் கல்வி சுற்றுலா செல்ல தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பப் பிரிவில் கல்வி பயிலும் செல்வி தயாளினி சத்தியநாதன் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினரால் இலங்கையிலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கிடையே நடாத்தப்பட்ட சமாதானக் கல்வி முரண்பாட்டு நிலைமாற்றம் என்பன தொடர்பாக இலக்கிய ஆக்கப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று ஜூன் மாதம் ஜேர்மன் நாட்டுக்குக் கல்விச்சுற்றுலாவில் செல்வதற்கு தெரிவாகியுள்ளார்.

மேற்படி சுற்றுலாவில் 17 தேசிய கல்வியியற் கல்லூரிகளிலிருந்தும் இருவர் மாத்திரமே பங்குகொள்ளவுள்ளனர்.

அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்தும் மற்றவர் மீரிகம ஹாபிடிகம தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறைந்த வசதிகளுடன் இயங்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மிகச் சிறப்பான முறையில் இயங்கி மேற்படி சாதனைகளை ஈட்டுவதையிட்டு, கொழும்பு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினரும் ஏனைய கல்வியாளர்களும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிக்கும் விரிவுரையாளர்களுக்கும் தமது பாராட்டைத் தெரிவித்துள்ளனர். (உ)

# உலக தரிசனம்

# வெற்றி விழாக் கொண்டாட்டத்தில் குண்டுத்தாக்குதல் 29 பேர் பலி

## ரஷ்யாவில் துன்பச் சம்பவம்

(மர்கச்கலா)

வெற்றிவிழாக் கொண்டாட்டம் ஒன்றினபோது ரஷ்யாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 29 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 50 பேருக்கு மேல் படுகாயமடைந்துள்ளனர்.

ரஷ்ய துவக்கு மைதானத்தில் இடம்பெற்ற ஜேர்மனியின் நாசிசவாதிகளை தோற்கடித்ததன் ஞாபகார்த்த வெற்றி விழாவின் போதே இக் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

அணிவகுப்பு ஆரம்பமான வேளை மைதானத்தின் அருகே நிறுத்தப்பட்டிருந்த பேருந்தில் மறைக்கப்பட்ட குண்டே வெடித்துள்ளதாக நம்பப்படுகிறது.

இத்தாக்குதலைகடுமையாக கண்டித்த ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தாக்குதல் நடத்தியவர்களை கண்டு பிடித்து அவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

செச்னிய தீவிர வாதிகளே இத்தாக்குதலை நடத்தியுள்ளனர் என்றும் அவர்குற்றம் சாட்டியுள்ளார் (உ.7)

## பல்கலை மாணவர் சென்ற பஸ் வண்டி பள்ளத்துள் பாய்ந்தது; 20 பேர் பலி

(பிறேசிலியா)

பஸ் வண்டி ஒன்று விபத்துக்குள்ளானதில் பிறேசிலில் 20 பேர் பலியாகியுள்ளதுடன் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சுமார் 50 பல்கலைக்கழக மாணவர்களை ஏற்றிக் கொண்டு சென்ற பஸ் வண்டியே பள்ளத்தினுள் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்திற்குசாரதியின் கவனயீனமோ அல்லது சதியோ காரணம் இல்லை என்றும் வாகனத்தின் பிறேக் பழுதடைந்தமையே காரணம் என்றும்தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

# அமைச்சுப் பொறுப்பை இராஜினாமா செய்வேன்

## பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி தன்மீது சுமத்தியுள்ள 7 குற்றச்சாட்டுக்களையும்14 தினங்களுக்குள் நிரூபித்தால் தனது அமைச்சுப் பொறுப்பை ராஜினாமா செய்யத் தயாராக இருப்பதாக கிராமிய கைத்தொழில் அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பி யினால் கொள்ளையிடப்பட்டு மத்திய வங்கியில் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ள பெருமளவு நகைகளை ஏலத்தில் விடப்போவதாக நான் அறிவித்தமை தொடர்பாக, ஜே. வி. பி. என் மீது அபாண்டமான பொய்களைச் சுமத்தி வருகின்றது.

நான்அரசாங்கப் பணத்தில் வெளிநாட்டுக்குச் சுற்றுலா செல்வதாகவும்வெளிநாட்டில் கைது செய்யப்பட்டதாகவும் பல்வேறு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

அவற்றை நான முற்றாக மறுக்கிறேன். என் மீதான 7 குற்றச்சாட்டுக்களையும் 14 தினங்களுக்குள் நிரூபித்தால் அமைச்சரவைப் பதவியை இராஜினாமாச் செய்வேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல்கடன்

குறள்

# வலம்புரி

## எஸ். பியின் வெருட்டு

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடம்பெறும் சமாதானப் பேச்சுவார்த்தைதோல்வியில் முடிந்து மீண்டும் யுத்தம் புரிய நேர்ந்தால் வல்லரசு நாடுகளின் ஒத்துழைப்புப் பெறப்படுமென சமுர்த்தி இளைஞர் விவகார அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா எச்சரிக்கை செய்துள்ளார்.

அமைச்சர் திஸநாயக்காவின் இவ்வெச்சரிக்கை இரண்டு பட்ட கருத்தை எடுத்துக்காட்டுகிறது. அதில் ஒன்று ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்குப் பின்னால் ஏதோவொரு வல்லரசுநாடு நிற்கிறது என்பதை உணர்த்துகிறது. அல்லது சமாதானப் பேச்சுவார்த்தையை இறுக்கி முடிவு காண்பதற்காக விடுதலைப் புலிகளை எச்சரிக்கை செய்வது போல் திஸாநாயக்கா உரையாற்றுகிறார்.

இதில் திஸநாயக்காவின் உரை எந்தப் பக்கம் சார்ந்தது என்பதை ஆராய்வதற்கு முன்னதாக இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது அரசு வழங்கத்தயாராக இருக்கின்ற உரிமைகளை, அதிகாரங்களைப் பொறுத்தே ஏற்பட முடியும். அதனை விடுத்து யுத்தம் தொடர நேர்ந்தால்வல்லரசுகளின் ஒத்துழைப்பைப் பெறவேண்டிய சூழ்நிலை ஏற்படுமெனக் கூறுவதெல்லாம் இனப்பிரச்சினைக்கான தீர்வாகமாட்டாது.

அதேவேளை வல்லரசின் ஒத்துழைப்புப்பெறப்படுமென சமுர்த்தி அமைச்சர் திஸநாயக்கா கூறியிருப்பதன் மூலம் நாட்டில் முப்படையினரும் கையாலாகாதவர்கள் என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

அத்துடன் விடுதலைப் புலிகளுடன் மோதுவதற்கு உலக வல்லரசுகளே வரவேண்டும் என்பதும் அவரின் மற்றைய மறைமுகக் கருத்து. இதில் இருந்து பார்க்கும் போது உலக வல்லரசுக்கு இணையாக விடுதலைப் புலிகள் பலம் பொருந்தியுள்ளார்கள் என்பதை அமைச்சர் திஸநாயக்கா பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார். ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில் இதே அமைச்சுப் பதவியில் இருந்து தகிடதத்தோம் புரிந்த அமைச்சர் திஸநாயக்கா இனி மேலாவது நாகாப்பது நல்லது.

# நாவலர் மேற்கொண்ட நற்பணிகளினால்

# கந்தபுராண கலாசாரம் நின்று நிலைக்கிறது

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் சைவமாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு 4.5 2002ல் நடைபெற்ற போது, கந்தபுராணமும், யாழ்ப்பாண கலாசாரமும் என்ற தலைப்பில் கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்)ஆற்றிய உரையின் தொகுப்பு.

(நேற்றைய தொடர்ச்சி)

இவ்வாறு இசையும்ஆடலும் எம்பெருமானுக்கு அர்ப்பண ஆக்கப்பட்ட நிலையில்' ஒரு மாற்றத்தைக் கொண்டுவர முற்படுகின்றார் நாவலர் பெருமான்.

நல்லூர் கந்தசுவாமிகோயிலாருக்குத்திருமுறைப்பஜனை முறைமையை அறிமுகம் செய்ய முற்பட்ட அவர் சிவாலயங்களிலே 'சதுர்என்ற பெயரால் தேவதாசிகள் ஆடிவந்த நாட்டியத்தை முற்றாக நிறுத்த வேண்டும் என்று அவர் பிரசாரம் செய்ய முற்பட்டமை, அவர்காலத்தில் இவ்வாட்டங்களில் புகுந்து கொண்ட ஆபாசங்களும், நடத்தைப் பிசகுகளும் ஒழிதல் வேண்டும் என்ற உறுதியான கருத்தின் வெளிப்பாடே பாதிரிமார்களின் கண்டனங்களுக்கு ஆளான இந்த இழிகலை வெளிப்பாட்டினைப் போக்குவது அவருக்கு இன்றியமையாததாகப் பட்டதில் தவறில்லை.

இவற்றிற்கு மாற்றீடாய், ஆண்கள், பெண்கள், சிறுவர் சிறுமியர் யாவரும் புராண படனங்களைக் கேட்டு, சீர்திருந்தி உண்மையான சைவசமயிகளாக மாறல்வேண்டும், சைவ உணர்வோடு அறிவையும் பெற்றுய்தல் வேண்டும் என்று அவர் கொண்டவேணவாவே புராண படனத்தை ஊக்கியதும் தாமே புராண படனம் செய்து வழிகாட்டியதுமாகும்.

### புராண படனம்

புராணபடனம் என்பது யாழ்ப்பாணத்திற்கே உரிய தெய்வீகக் கலைஇதன் தோற்றம் பற்றிப் பண்டிதமணி ஆராய்ந்து கூறிய அருங்கருத்து இது,

''கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணம் பாடிய காலத்திலேதானே கந்தபுராண படனம்யாழ்ப்பாணத்தில் தொடங்கிவிட்டது. அப்பொழுது தானே தனிச் சிறப்பு முறையான புராணபடனம் முறையும் இங்கேஅமைந்து விட்டது போலும்என்றுஎண்ணஇடமுண்டு என்பதற்கு ஆதாரம் பின்வருமாறு. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் அரசர்கள் ஒருவர் பின் ஒருவராய்ப் பன்னிருவருக்குமேற் பட்டவர்களுள் ஒருவனான தமிழரசனின் மந்திரி புவனேகவாகு அவர் பிராமணர். கங்காதரக் குருக்கள் என்பது அவர் இயற்பெயர். அவர் கி.பி 950 இல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டினார்.

இதற்கு ஆதாரம் இலகிய சகாத்தம் மெண்ணூற்றெழுபதாம் ஆண்டதெல்லை' எனத் தொடங்கும் (சரித்திரப் பிரசித்தி பெற்ற பாடல்) நல்லூர்க்கந்தசுவாமி கோயிலுக்கு நூற்றெழுபதாண்டுக்கு முன்பு (அதாவது 1120ஆம் ஆண்டு) கந்தபுராணம் இயற்றப்பட்டது என்பதும்' கச்சியப்ப சிவாசாரியாரின் சகபாடியான யாழ்ப்பாடியும், கச்சிக்கணேசையரும் (இந்த யாழ்ப்பாடி மணற்றியைப் பரிசாப் பெற்ற அந்தச் கவிவீரராகவன் அல்லன்) கந்த புராண அரங்கேற்றத்திற் கலந்து கொண்டவர் என்பதும், கச்சிக் கணேசையர் கந்த புராணத்தைப் படிக்க அதன பிரதியை இங்குக் கொணர்ந்தவரை என்பதும் அவராலேயே புராணபடனமுறையாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்யப்பட்டதுஎன்பதும பண்டிதமணி கொண்ட முடிவுகள். இவை மேலும் ஆய்விற்குரியன.

ஆனால் 'புராணபடனம் தனித்த தொரு முறையில் யௌவன தசை அடைந்து உச்சநிலையில்விளக்க முறைச் செய்தவர் ஆறுமுக நாவலர்' என்ற அவரின்கூற்று முற்றிலும் பொருந்துவதே.

### புராணபடன முறையும் ஒழுங்கும்

நாவலரவர்கள் பலபிரதிகள் கொண்டு பரிசோதித்து வெளியிட்ட கந்தபுராண நூலிலே சிவபுராண படன விதி என்றொரு பகுதியை எழுதியுள்ளார். அப்பகுதியிலேபுராணபடனமுறைமை அதனைப் படிக்கும் காலத்திற் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் படனம் செய்தற்கான தகுதியாளர் பற்றியெல்லாம் மிகவிரிவாகவும் தெளிவாகவும் வரையறை செய்துள்ளமை சிறப்பித்துக் கூற வேண்டுவதாகும்.

'காலத்துக்கும் விஷய குணபாவத்துக்கும் ஏற்ப எச்சுதியில் எவ்விராகத்தில் வாசிக்கப்படுகிறதோ, அச்சுதியில் அவ்விராகத்திற்றானே பொருள் சொல்ல வேண்டும் என்பது புராணத்தைப் படிப்போரும் பொருளுரைப்போரும் கடைப் பிடிக்க வேண்டியவிதி.

அவ்வாறாயின் கந்தபுராணப் பாடல்களிலே தாடனம் மட்டு மன்றி, அதனைஇசையோடு சுவைபடப்படிப்பதும் உரைப்பதும் இன்றியமையாதன என்பதும் பெறப்படும்.

இவைமட்டுமல்ல புராணபடனம் செய்வோர் சைவ ஆசார சீலர்களாயும், நற்குணம்வாய்ந்தவராயும் இருத்தல் வேண்டும், அத்தகையர் சிவபெருமானாகவேபாவிக்கப்பட வேண்டியவன் என்பது நாவலர் கருத்து. சிவாலயங்கள், நதிக்கரைகள், குளக்கரைகள், மடாலயங்கள் என்பனவே புராணபடனம் செய்தற்கு உகந்த இடங்கள் என்பதும் புராணச்சுவடிஉயர்பீடத்தில் வைத்து பூசை செய்யப்படல் வேண்டும் என்பதும், புராணபடனத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் காப்புச் செய்யுள் ஓதப்படல்வேண்டும் என்பதும், புராணபடனகாரர்கள் அகமும் புறமும் தூயராய், சிவபூசா துரந்தரராய், சந்தியாவந்தனம் செய்பவராயும்செய்தபின்னரே புராணபடனம் செய்யத் தகுதியடைவர் என்பதும், புராணபடனம் கேட்போர் தவறாது நாள்தோறும் தொடர்ந்து பயபத்தியுடன்கேட்டல்வேண்டும் என்பதும், நாள்தோறும் புராணபடன முடிவில் சிவனடியார் ஒருவருக்கும் அன்னதானம் வழங்கல்வேண்டும் என்பதும், காண்டங்களின் முடிவிலும், திருக்கலியாணம் முதலிய சுபமான பகுதிகளைப்படனம்செய்கையில்சிவனடியார்க்கு அன்னதானம் வழங்கல்வேண்டும் என்பதும், புராணபடனம் முழுமையாகப்படித்து முடித்தபின் புராண ஏட்டிற்குப் பூசை புரிந்து, வாகனத் திருத்தி மங்கலவாத்திய சகிதம் திருவுலாக் கொணர்தல் வேண்டும் என்பதும், முதலாகப் பலவாகிய புராணபடன விதிகளை, கந்தபுராணம் உபதேசகாண்டம், பிரமோத்தரகாண்டம், சிவஞானதீபம் முதலியவற்றிலிருந்து போதிய ஆதாரங்கள் காட்டி நாவலர் அறிவுறுத்தியுள்ளார்.

புராணபடனத்திலே பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறந்து விளங்கியோர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், அவரின் மருகரான வித்துவ சிரோமணி ந.ச.பொன்னம்பல பிள்ளை, இலக்கணக் கொட்டர் முருகேசபண்டிதர், சுன்னாகம் குமாரசாமிப் புலவர் முதலியோர் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேமிகப்பிரசித்தி பெற்று விளங்கியவர்கள். இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம்கால்வரை யாழ்ப்பாணத்தின் கிராமங்கள் பலவற்றிலும் புராணபடனங்களைத் திறம்படநடத்திச் சைவசமய அறிவினையும், பக்தி நெறியையும் வளர்த்த பேரறிஞர் வரிசையிலே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, முதன்மைஇடம்பெறுகின்றார். இவர்கள் போன்றாரின் புராணபடனப் பெரும்பணி சைவசமய நெறிமுறைகள், ஆசாரங்களைப் பேணிக்காத்திடப் பெரிதும் உதவின என்பதற்கு ஐயம் இலை.'' இதனாலேயே யாழ்ப்பாணக் கலாசாரம்கந்த புராணக் கலாசாரம்'' எனப் பண்டிதமணி மொழிந்தார். நாவலரும் வித்துவ சிரோமணியும்

நல்லூர்க்கந்தசுவாமிகோயிலிலே சிவதீட்சைபெற்ற பிராமணர்களே புராணபடனம் செய்வதாகிய மரபுநிலவி வந்தது. இன்றும் நிலவுகின்றது. ஆனால் இந்தக்கட்டுப்பாட்டுக்கு விதிவிலக்காக நாவலரும் அவரின் மருகராகிய வித்துவசிரோமணி பொன்னம்பல பிள்ளையும் விளங்கினர்.

வித்துவ சிரோமணி தலைசிறந்த இலக்கியச் சுவைஞர். கம்பராமாயணமும் சீவக சிந்தாமணியும்அவரின் முதன்மையான இலக்கியச் சுவைக்களங்கள். எனினும் கந்தபுராண படன உரைகாரர்களுள தலைசிறந்து விளங்கிய அவரை எவரும் புராணபடனப் பாட்டுரைப்போராய் நினைத்துப் பார்ப்பதும்இல்லை. அத்தகையர் தமதுமாமனாருக்குப் பாட்டுவாசிப்பவராய்அமர்ந்தார் என்றால் அதுவியப்புத்தான். ஒருநாள நல்லூரில்மாமனும்மருகரும் புராணபடனத்தினை நல்லூர்க்கந்த சுவாமி கோயிலில் நிகழ்த்தியமை, இலக்கியரசிகர்களாகிய பதசரங்களாலும், சைவசமய நல்லறிஞரான சரோருகள் களாலுமநீண்டகாலம் மறக்கப்படாதநிகழ்ச்சி ஒன்றாகஅமைந்துவிட்டது.

சிங்கமுகாசுரன், தன்தமையனாகிய சூரபன்மனின் அறியாமையைப போக்கிடவும், கந்தசுவாமியின்பரத்துவத்தை அவனுக்கு அறிவுறுத்தவும்கூறியதாய்அமைந்தபாடல்ஒன்றை வித்துவ சிரோமணி பாட, நாவலர் அதற்கு அன்று மிக விரிவாகவும் கேட்போர் உள்ளங்கள் தம்வயமிழந்துதீவாய்ப்பட்ட மெழுகுபோல் உருகவும் உரைவகுத் துரைத்தார். அந்தத்திருப்பாடல்இதுதான்.

வேதக்காட்சிக்கும்உபநிடத்
துச்சியில் விரித்த
போதக்காட்சிக்குக்
காணலன் புதியதிற் புதியன்
மூதக்கார்க்குமூ தக்கவன்
முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயி
ராய்நின்ற அமலன்.

இப்பாடலுக்கு நாவலர் ஆற்றிய விரிவுரைபற்றிப்பண்டிதமணி தமது கட்டுரை ஒன்றில் கூறும் விவரணம் இவ்விடத்தில் நோக்கத்தக்கதாகும்.

ப..., வேதக் காட்சி சாத்திரஞானம், அது பாசஞானம் உபநிடதத்துச்சியில் விரித்த போதக்காட்சி பசுஞானம் பசுவாகிய ஆன்மா பாசத்தைவிலகித் தன்னைப்பிரமமயமாகக் காணும்ஞானம் அந்தஞானம் 'நான் பிரமம்' என்னும்

(4ம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

## சமயப்பற்று

ஆறு சமயத்தும், அதுவதுவாய் றின்றிலங்கும்
வீறு பரைதிருத்தாள் மேவுநாள் எந்நாளே?

- தாயுமானவர்

செம்பொருளே, உன்னைச் சார்ந்திருப்பவர் அனைவரும் சேவித்த நெறி ஒன்றே. அந்நெறி எனக்கும் உரித்தாகுக.

வெளிவேஷங்களும் பழக்கவழக்கங்களும் சமய அனுஷ்டானமாகா. மனதின் பாங்கு சமயப்பற்றை விளக்கும். பகை, பொறாமை, ஆசை, ஆணவம் முதலியன செந்நெறி சாராமைக்குச் சான்றுகள். இக்குற்றங்களைக் களைய முயலுவாயானால் உன்னிடத்துச் சமயப்பற்று உண்டு. அன்பும், அமைதியும், தன்னலங் கருதாமையும் உன்னிடத் திருக்குமாகில், நீ ஒரு சமயத்தையும் சேராதவனாயிருந்தாலும் நீ சமயப்பற்றுடையவனே.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்




ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் சாகித்திய விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் உரையாற்றுவதையும் அரங்கில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜெ.எக்ஸ்.செல்வநாயகம், சென்னைப் பல்கலைக்கழக மெய்யியல்துறைத் தலைவர் இரா.கோபாலகிருஸ்ணன், ஈழவேந்தன் ஆகியோர் உட்பட கலைஞர்கள் அமர்ந்திருப்பதனையும், கலைஞர் கௌரவிப்பில் மிருதங்க வித்துவான் தி.சண்முகந்தரம் ஈழவேந்தன் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதனையும் கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.






# விருது வழங்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியத்தின் "விருதுகள் வழங்கும்" இறுதி நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த)


லாலா
சோப்
சன்சயின்
சோப்
எமது வன்னி மண்ணிலும் மீண்டும் விற்பனைக்கு வரவிருக்கின்றது.
லாலா அச்சுவேலி


# 14லட்சம் மிதிவெடிகளை படையினர் வன்னியில் புதைத்துள்ளனர்!

## வெண்புறாவின் பணிப்பாளர் தகவல்

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாட்டு வன்னிப் பகுதியில் சுமார் பதின்நான்கு லட்சம் மிதிவெடிகள் இராணுவத்தினரால் புதைத்து வைக்கப்பட்டிருப்பதாக உத்தேச மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடிகள் அகற்றும் வெண்புறாவின் பணிப்பாளர் டி.யோகன் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில் கிளிநொச்சியில் 90வீதமான கண்ணிவெடிகள் மீட்கப்பட்டுள்ளது. நெடுங்கேணி, புளியங்குளம், கனகராயன்குளம் பகுதியில் உள்ள கண்ணிவெடிகளை மீட்பதற்கான பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக் கண்ணிவெடிகள் பெரும்பாலும் வயல்வெளிகளிலேயே புதைக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார் (வ)

# திருகோணமலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிமனை ஒன்று நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்டது.

ஹேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி லிடோ பண்மனைைய திறந்து வைத்தார். தற்போதைய சமாதான சூழ்நிலையில் மீள குடியேற்றம், மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடும் பொருட்டே திருகோணமலை நகரில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. (த)

# உண்ணாவிரதப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிவடக்குப் பகுதிகளில் மீளக் குடியமர அனுமதிக்க வேண்டுமென்று கோரி எதிர்வரும் 15ந் திகதி வலி வடக்குப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு பிரதேச செயலகம் முன்பாக வலி வடக்கு மக்கள் ஒன்று கூடுமாறும், இங்கு இடம்பெயர்ந்த விபரங்களும் திரட்டப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது (இ)

## பொதுவிலில்...

இந்த நடவடிக்கை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் எனவும் இது விடயம் தொடர்பாக அம்பாறை யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் தமிழத் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். (த)

## வலி வடக்கு...

அமைச்சர், யாழ் குடாநாட்டுத்தளபதி அடங்கிய உயர் மட்ட மாநாடு ஒன்றைக் கூட்டி ஆராய்வதற்கான ஏற்பாடுகளை விரைவில் செய்யவுள்ளேன். இதில் வலிகாமம் வடக்கு மக்கள் ஐயுறவு கொள்ளத் தேவையில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதிவியேற்ற கடந்த 5மாத காலத்திற்குள் யாழ் குடாநாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான பணியை பல சிரமங்களின் மத்தியில் செய்து வருகிறது.

யாழ்குடாநாட்டை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கு போதியளவு நிதி திறைசேரியிடம் இல்லை யுத்தத்திற்குச் செலவு செய்யப்படும் பணத்தை மிச்சப்படுத்தியும், வெளிநாடுகளில் இருந்து பெறக்கூடிய நிதி உதவிகளைக் கொண்டும் புனரமைக்கவுள்ளோம். அதேவேளை காங்கேசந்துறை துறைமுகம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதேபோல் மீள்குடியேற்றம், நீர், சுகாதாரம், போக்குவரத்து, கல்வி ஆகியனவும் வெளிநாடுகளின் உதவியுடனும் சீர்செய்யவுள்ளேன். இது தொடர்பாக 40க்கும் மேற்பட்ட தூதுவர்களைச் சந்திக்கவுள்ளேன் என்றும் அப்பேட்டியில் அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனா தெரிவித்துள்ளார். (வ)

## தனி நாட்டுக்கான...

நிர்வாக சபையை அமைக்கவே விடுதலைப்புலிகள் விரும்புகின்றனர். ஆனால் தனிநாட்டுக் கோரிக்கைக்கான, மாற்று வழிகள் குறித்து பேசுவதற்கு அவர்கள் மறுத்துள்ளனர்.

விடுதலைப்புலிகளுடன் இரண்டு தடவைகள் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நான் முற்பட்ட போதும், சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்கு அவர்கள் மறுத்தனர்.

இனப்பிரச்சினைத் தீர்வு நோக்கிய அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் பற்றி பாராளுமன்றத்தில் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேசியிருந்த போதும், அது பற்றி கலந்துரையாடப் புலிகள் இணங்கவில்லை.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை வெற்றிபெற வேண்டும் அதனைப் பார்க்கவே நான் விரும்புகின்றேன், சமாதானம் நீண்டகாலத் திட்டம், அதனை ஒரே இரவில் அடைந்துவிட முடியாது என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ.5)

## தமிழ்க் கட்சி...

இன்று இடம்பெறும் இந்தப் பேச்சுக்களில் இன்றைய அரசியல்நிலை குறித்து அவர்கள் விரிவாக ஆராய உள்ளனர். பேச்சுக்கள் முடிவடைந்ததும் இன்று மாலையே அவர்கள் வவுனியா திரும்பவுள்ளனர்.

இதேவேளை தமிழ்ச்செல்வனுக்கும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமான சந்திப்பு நேற்று இடம்பெற இருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## கண்காணிப்புக் குழு...

நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஆவன செய்ய வேண்டும் எனவும் தமிழ்ச்செல்வன் கேட்டுள்ளார். நேற்று முன்தினம் வியாழக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் புலிகளுடைய அரசியல்துறைப பொறுப்பாளரைச் சந்தித்து கலந்துரையாடலை நடத்தியிருந்தார்.

கிளிநொச்சி நடுவப்பணியகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது புலிகளுடைய முக்கியஸ்தர்கள் சிலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தீவுப் பகுதிக்கு புலிகள் சுதந்திரமாக அரசியல் பணிகளில் ஈடுபடுவதற்கு ஏற்பட்டுள்ள தடைகள், கடல் பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் நடமாட ஏற்பட்டுள்ள தடைகள், மீனவர்கள் மீதான கடற்படையினரின் கெடுபிடிகள் அச்சுறுத்தல்கள் இல்லாது மீன்பிடிப்பில் ஈடுபட ஆவன செய்தல், ஆலயங்கள், பாடசாலைகளிலிருந்து படையினர் வெளியேறாமை குறித்து கலந்துரையாடப்பட்டது. அத்துடன் இந்த நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தடங்கல்கள் அவற்றை நீக்க உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்வது சம்பந்தமாகவும் தமிழ்ச்செல்வன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார்.

கொழும்பு திரும்பியதும் பிரதமரைச் சந்தித்து கலந்துரையாடப்பட்ட விடயங்களை தெரிவித்து ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்வதாக கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன. (வ)

## யாழ் மாவட்ட...

யாழ் மாவட்டத்தில் தற்போது இயங்கிவரும் மேற்படி ஏழு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், யாழ் கூட்டுறவுத்திணைக்கள உத்தியோகத்தர்கள் கிளிநொச்சி சென்றிருந்தனர். (ம.)

# பஸ் விபத்தில் நால்வர் பலி

(கொழும்பு)

இரத்தினபுரிப் பகுதியில் நேற்று மாலை பஸ் ஒன்று பள்ளத்துக்குள் விழுந்த விபத்துக்குள்ளானதில் கர்ப்பிணிப்பெண் ஒருவர் உட்பட நான்கு பேர் உயிரிழந்தனர், 21பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த அனைவரும் இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் (க)

# உரும்பிராயில் கோஷ்டி மோதல் ஐவர் காயம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் தெற்குப்பகுதியில் நேற்று இடம்பெற்ற கோஷ்டி மோதலில காயமடைந்த ஐந்துபேர் யாழ் போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி ஜெகதீஸ்(வயது23), சீனியர் குணபாலன்(வயது38), மார்க்கண்டு இராசேந்திரம்(வயது44), வேலன சீனிமணி(வயது46), சீனிமணி மகேஸ்வரன்(வய்து26) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (இ)

உயர் தொழில்நுட்ப நிறுவன

# பணிப்பாளர் நாயகம் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில் நுட்ப நிறுவனப் பணிப்பாளர் நாயகம் வசந்த ஜெயசிங்க தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இக் குழுவினர் யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நிலவும் குறைபாடுகள் குறித்து அதன் பணிப்பாளர் ரி.இராஜரட்ணத்துடன் கலந்துரையாடவுள்ளனர். (ந)

## புரிந்துணர்வு...

அதிகாரங்கள் சிக்கலான நிலையை சந்திக்க வேண்டிவரும்.

உடன்படிக்கையை இரத்துச் செய்யும் விடயங்களில் நீதிமன்றம் தலையிடுமானால், அதிகார துஷ்பிரயோக செயல் என்றே கருதப்படக்கூடிய சூழ்நிலை உருவாகக் கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ்.எல். குணசேகர மன்றில் தனது வாதத்தை முன் வைக்கும் போது,

அரசாங்கம் என்ன முடிவை எடுத்தாலும் அது அரசியல் யாப்புக்கு உட்பட்டதாகவே இருக்கவேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ். விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்தகைய தடை செய்யப்பட்ட அமைப்புடன் உடன்படிக்கைய்ய ஏற்படுத்தியதன் மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தண்டனைக்குரிய குற்றம் இழைத்தவராகிறார். என்று வாதிட்டார்.

இதற்கு பதிலளித்து விளக்கம் அளித்த நீதிபதி:-

உடன்படிக்கையின் மூலம் எவரேனும் தண்டனைக்குரிய குற்றவாளியாக மறியிருந்தால் அது பற்றி மேல்முறையீட்டு நிதிமன்றில் விசாரிக்க முடியாது என்று குறிப்பிட்டார். (இ)

வல்வெட்டித்துறையில்

# வயோதிபர் கொலை

(கம்பர்மலை)

வல்வெட்டித்துறையில் வயோதிபர் ஒருவர் நேற்று இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வ்.இ.நடனசிகாமணி(வயது75) என்பவரே கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

பிரஸ்தாப வயோதிபர் வீட்டில் தனிமையில் இருந்த வேளையில் இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந.253)


ராம் கோ சீமெந்து

தரத்தின் சின்னம் ! உறுதியின் உத்தரவாதம் //

இலங்கை, இந்தியாவில் பிரசித்தி பெற்ற தரமான ராம் கோ சீமெந்தை இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்துள்ளோம்.

கட்டிடங்களுக்கு உறுதியளிக்கும் தரமான ராம் கோ சீமெந்தை, மொத்தமாக கொள்வனவு செய்ய விரும்பும் வியாபாரிகள், கட்டிட ஒப்பந்தக்காரர்கள், பாவனையாளர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

சர்வின் என்ரர்பிரைசஸ்
304 (110) ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் 021- 2511
(C/4197)

மில்க்வைற்
25 மொடேன் மில்க்வைற் மேலுறைகளை சேகரித்து ஓர் அப்பியாசக் கொப்பியை பெற்றுக் கொள்ளுங்கள்.
MODERN MILK WHITE SOAP
மில்க்வைற் சோப் இன்டஸ்ரியல்ஸ்
527, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

ராஜா
(யாழ்ப்பாணம்)
5வது வாரமாக
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
TAMILAN
தினசரி 10.30, 2.30
சனி ஞாயிறு 10.30, 2.30, 5.30
[C/3953]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.05.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.